மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.
**முன்னிலை : திருமதி. M.M.J. உம்முல் ஃபாரிதா, B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் நிதிபதி,
போடிநாயக்கனூர்.
திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீசோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 05-ம் நாள்
2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் நாள் செவ்வாய்க்கிழமை.
அசல் வழக்கு எண்.169/2022.

**Original Suit CNR No.TNTH12-000336-2022.**

பிச்சைமணி .... வாதி

// எதிர் //

1. காசிமாயன்
2. வனராணி
3. P.பால்சாமி .... பிரதிவாதிகள்

------

இவ்வழக்கானது 30.09.2022ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்னிலையில் 30.10.2023-ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்ததில் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராஜமோகன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.சந்திரசேகரன் அவர்கள் ஆஜராகியும், 3ம்பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.முத்து வினோத்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாதகாரணத்தினால் கடந்த 29.08.2023ம்தேதி ஒருதலைபட்சமாக்கப்பட்டு தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

## தீர்ப்புரை

### 1) வழக்குப்பாிகாரம்.

வழக்குரைச்சொத்தில் வாதிக்குரிய சரிபாதி 1/2 பாகத்தினை எதிர்வாதிகள் நயமிடர் பார்த்து பிரிவினை செய்து, தனித்த சுவாதீனம் தரும்படி முதல்நிலை

M M J UMMUL FARITHA Digitally signed by M M J UMMUL FARITHA Date: 2023.11.21 17:50:02 +0530

தீர்ப்பாணை வேண்டியும், சமூகம் நீதிமன்றம் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து வாதிக்குரிய சரிபாதி பாகத்தினை பிரிவினை செய்துகொள்ள இறுதிநிலை தீர்ப்பாணை வேண்டியும், 1ம்எதிர்வாதி பெயருக்கு தொந்தியம்மாள் என்பவரால் 09.05.2006ம்தேதி போடி சார்பதிவக ஆவண எண்.3554/2006 தானசெட்டில்மெண்ட் ஆவணம் வாதியின் பாகத்தினைப்பொறுத்து செல்லாது என்று விளம்புகை பரிகாரம் வேண்டியும், 1ம்எதிர்வாதி பெயருக்கு தொந்தியம்மாள் என்பவரால் 27.09.2007ம்தேதி எழுதிக்கொடுக்கப்பட்ட போடிநாயக்கனூர் சார்பதிவக ஆவண எண்.3259/2007 சீர்திருத்தல் ஆவணம் வாதியின் பாகத்தினைப்பொறுத்து செல்லாது என்று விளம்புகை பரிகாரம் வேண்டியும், 1ம்எதிர்வாதியால் 2ம்எதிர்வாதி பெயருக்கு 14.02.2011ம்தேதி எழுதிக்கொடுக்கப்பட்ட போடிநாயக்கனூர் சார்பதிவக ஆவண எண்.1073/2011 கிரைய ஆவணம் வாதியின் பாகத்தினைப்பொறுத்து செல்லாது என்று விளம்புகை பரிகாரம் வேண்டியும், 2ம்எதிர்வாதியால் 3ம்எதிர்வாதி பெயருக்கு 21.09.2022ம்தேதி எழுதிக்கொடுக்கப்பட்ட போடிநாயக்கனூர் சார்பதிவக ஆவண எண்.5910/2022 கிரைய ஆவணம் வாதியின் பாகத்தினைப்பொறுத்து செல்லாது என்று விளம்புகை பரிகாரம் வேண்டியும், 2ம்எதிர்வாதியால் 3ம்எதிர்வாதி பெயருக்கு 22.09.2022ம்தேதி எழுதிக்கொடுக்கப்பட்ட போடிநாயக்கனூர் சார்பதிவக ஆவண எண்.5927/2022 சீர்திருத்தல் ஆவணம் வாதியின் பாகத்தினைப்பொறுத்து செல்லாது என்று விளம்புகை பரிகாரம் வேண்டியும், வழக்குச்சொத்துக்களை எதிர்வாதிகள் வழக்கு முடியும்வரை எவ்வித வில்லங்கத்திற்கும் உட்படுத்தக்கூடாது என்று நிலையுறுத்துக்கட்டளைப்பரிகாரம் வேண்டியும், இவ்வழக்கின் செலவுத் தொகையை வாதிக்கு, பிரதிவாதிகள் செலுத்தக்கோரியும் இதரபரிகாரங்கள் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>வாதியின் வழக்குரைச்சுருக்கம்:</u>

வழக்குச்சொத்தும் இன்னும் பிற சொத்துக்களும் வாதியின் தந்தை லேட்.மாயாண்டித்தேவருக்கு பாத்தியப்பட்டது என்றும், மாயாண்டித்தேவர் மனைவி தொந்தியம்மாள் என்றும் மாயாண்டித்தேவர் சுமார் 45 வருடங்களுக்கு முன்பு

M M J UMMUL FARITHA Digitally signed by M M J UMMUL FARITHA Date: 2023.11.21 17:50:07 +0530

காலமாகி விட்டார் என்றும், தொந்தியம்மாள் 06.12.2015 ம்தேதி காலமாகிவிட்டார் என்றும், இவர்களுக்கு வாதியும், 1 ம்எதிர்வாதியும் மட்டுமே சட்டப்பூர்வமான வாரிசுகள் என்றும், வாதியின் தந்தை மாயாண்டித்தேவருக்கு பூர்வீகப்பாத்தியப்பட்ட சொத்தின் வருமானத்தைக் கொண்டு வாதியின் தாயார் தொந்தியம்மாள் பெயரில் ஒரு வீடு கிரையம் பெறப்பட்டதென்றும், மாயாண்டித்தேவர் காலமான பின்னர் இந்தபொதுக் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சில சொத்துக்களைப்பொறுத்து வாதியும், 1 ம்எதிர்வாதியும் இவர்களின் தாயாரான தொந்தியம்மாளும் கடந்த 03.10.2002 ம்தேதி பாகப்பிரிவினை செய்து கொண்டனர் என்றும் தாவாச்சொத்தும், வாதியின் தாயார் பெயரில் பெறப்பட்ட வீட்டினையும் வாதியும், 1 ம்எதிர்வதியும் இவர்களின் தாயார் தொந்தியம்மாளும் கூட்டாக அனுபவித்து வந்தநிலையில் தொந்தியம்மாள் பெயரில் உள்ள வீட்டில் வாதிக்குரிய பாகத்தினைப்பொறுத்து விடுதலை ஆவணம் எழுதிக்கொடுக்குமாறு 1 ம்எதிர்வாதி வேண்டவே கடந்த 29.06.2006 ம்தேதி மேற்படி வீட்டினை பொறுத்து மட்டும் வாதிகளுக்குரிய பாகத்தினைப்பொறுத்து பாகபாத்திய விடுதலை எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் எனவே தாவாச்சொத்தினை மட்டும் வாதியும், 1 ம்எதிர்வாதியும் பொதுக்குடும்பச்சொத்தாகக்கொண்டு பொதுவாக அனுபவித்து வரபட்டதென்றும், இந்நிலையில் வழக்குரைச்சொத்தில் வாதியின் அனுபவத்திற்கு 3 ம்எதிர்வாதி 23.09.2022 ம்தேதி இடையூறு செய்ய முயன்றதால் வாதி வழக்குச்சொத்தினைபொறுத்து போடிநாயக்கனூர் சார்பதிவக அலுவலகத்தில் 25.09.2022 ம்தேதி வில்லங்கம் பார்த்தபோது 09.05.2006 ம்தேதி போடிநாயக்கனூர் சார்பதிவக ஆவண எண். 3554/2006 ன்படி வாதியின் தாயார் தொந்தியம்மாள் 1 ம்எதிர்வாதி பெயருக்கு தாவாச்சொத்தினையும், அவரது பெயரிலான பொதுக்குடும்ப வீட்டினையும் தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தும் அதனை தொடர்ந்து தொந்தியம்மாள் 1 ம்எதிர்வாதி காசிமாயனுக்கு 27.09.2007 ம்தேதி போடிநாயக்கனூர் சார்பதிவக ஆவண எண்.3529/2007 ன்படி ஒரு சீர்திருத்தல் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், அதனை தொடர்ந்து 1 ம்எதிர்வாதி அவரது மனைவியான 2 ம்எதிர்வாதிக்கு 14.02.2011 ம்தேதி போடிநாயக்கனூர் சார்பதிவக ஆவண எண்.1073/2011 ன்படி வழக்குச்சொத்தினை கிரையம் கொடுத்தாகவும்

M M J UMMUL FARITHA Digitally signed by M M J UMMUL FARITHA Date: 2023.11.21 17:50:12 +0530

அதன்படி 2ம்எதிர்வாதி, 3ம்எதிர்வாதிக்கு போடிநாயக்கனூர் சார்பதிவக ஆவண எண்.5920/2022ன்படி கிரைய ஆவணமும், அதனைத்தொடர்ந்து மறுநாளே போடி சார்பதிவக ஆவண எண்.5927/2022ன்படி 2ம்எதிர்வாதி 3ம்எதிர்வாதிக்கு சீர்திருத்தல் பத்தரமும் எழுதிக்கொடுத்துள்ளது வாதிக்கு தெரியவந்ததாகவும், தாவாச்சொத்து தொடர்ச்சியாக வாதியின் தந்தை காலம் தொட்டு வாதி மற்றும் 1ம்எதிர்வாதியின் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறநிலையில் 1ம்எதிர்வாதி வாதியின் பாகத்தினை மோசடி செய்யும் எண்ணத்துடன் தாவாச்சொத்தில் உரிமையில்லாத தொந்தியம்மாளிடம் ஒருதானசெட்டில்மெண்ட் ஆவணத்தை மோசடியாக உருவாக்கிக்கொண்டு அதனடிப்படையில் அவரது மனைவி பெயருக்கு கிரையமும் மனைவி மூலம் வேறு நபருக்கு கிரையம் கொடுத்தது போல் ஆவணத்தை உருவாக்கி வாதியின் பாகத்தினை மோசடி செய்ய முயன்று வருகிறன்றனர் என்றும் 1முதல் 3 எதிர்வாதிகளால் ஏற்படுத்திக்கொண்டுள்ள ஆவணங்கள் தாவாச்சொத்தில் வாதியின் பாகத்தினைப்பொறுத்து செல்லாது என்பதுடன் அது இல்லா நிலையை அடைந்துவிட்டது என்றும், எனவே வழக்குச்சொத்தில் வாதிக்குரிய சரிபாதி பாகத்தினை நயமிடர் பார்த்து பிரிவினை செய்யவும் வழக்குச்சொத்தினைப்பொறுத்து 1 முதல் 3 எதிர்வாதிகள் ஏற்படுத்திக்கொண்ட ஆவணங்கள் வாதியின் பாகத்தினை பொறுத்து செல்லாது என்று விளம்புகை செய்யவேண்டியும் வாதியால் இவ்வழக்குதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜராகி எதிர்வழக்கரை தாக்கல் செய்யாததால் கடந்த 29.08.2023ம்தேதி ஒருதலைபட்சமாக்கப்பட்டு தோன்றாத் தரப்பினராக்கப்பட்டுள்ளார்கள்.

**4) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால்**

| |
|---|
| வாதி வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக் கூடியதா ? |

**5)** வாதி தரப்பில் வாதி பிச்சைமணி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல்6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

M M J UMMUL FARITHA
Digitally signed by M M J UMMUL FARITHA
Date: 2023.11.21 17:50:17 +0530

சாட்சி ஆறுமுகம் ன்பவா் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.7, 8 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

7) வாதி தரப்பு வழக்கறிஞரின் வாய்மொழி விவாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

8) வழக்குச்சொத்தும் இன்னும் பிற சொத்துக்களும் வாதியின் தந்தை லேட்.மாயாண்டித்தேவருக்கு பாத்தியப்பட்டது என்றும், மாயாண்டித்தேவா் மனைவி தொந்தியம்மாள் என்றும் மாயாண்டித்தேவா் சுமாா் 45 வருடங்களுக்கு முன்பு காலமாகிவிட்டாா் என்றும், தொந்தியம்மாள் 06.12.2015ம்தேதி காலமாகிவிட்டாா் என்றும், இவா்களுக்கு வாதியும், 1ம்எதிா்வாதியும் மட்டுமே சட்டப்பூா்வமான வாாிசுகள் என்றும், வாதியின் தந்தை மாயாண்டித்தேவருக்கு பூா்வீகப்பாத்தியப்பட்ட சொத்தின் வருமானத்தைக் கொண்டு வாதியின் தாயாா் தொந்தியம்மாள் பெயாில் ஒரு வீடு கிரையம் பெறப்பட்டதென்றும், மாயாண்டித்தேவா் காலமான பின்னா் இந்தபொதுக் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சில சொத்துக்களைப்பொறுத்து வாதியும், 1ம்எதிா்வாதியும் இவா்களின் தாயாரான தொந்தியம்மாளும் கடந்த 03.10.2002ம்தேதி பாகப்பிாிவினை செய்து கொண்டனா் என்றும் தாவாச்சொத்தும், வாதியின் தாயாா் பெயாில் பெறப்பட்ட வீட்டினையும் வாதியும், 1ம்எதிா்வதியும் இவா்களின் தாயாா் தொந்தியம்மாளும் கூட்டாக அனுபவித்து வந்தநிலையில் தொந்தியம்மாள் பெயாில் உள்ள வீட்டில் வாதிக்குாிய பாகத்தினைப்பொறுத்து விடுதலை ஆவணம் எழுதிக்கொடுக்குமாறு 1ம்எதிா்வாதி வேண்டவே கடந்த 29.06.2006ம்தேதி மேற்படி வீட்டினை பொறுத்து மட்டும் வாதிகளுக்குாிய பாகத்தினைப்பொறுத்து பாகபாத்திய விடுதலை எழுதிக்கொடுத்துள்ளாா் என்று கூறியுள்ளாா். மேற்படி ஆவணம் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

M M J UMMUL FARITHA Digitally signed by M M J UMMUL FARITHA Date: 2023.11.21 17:50:21 +0530

9) எனவே தாவாச்சொத்தினை மட்டும் வாதியும், 1ம்எதிர்வாதியும் பொதுக்குடும்பச்சொத்தாகக்கொண்டு பொதுவாக அனுபவித்துவரபட்டதென்றும், இந்நிலையில் வழக்குரைச்சொத்தில் வாதியின் அனுபவத்திற்கு 3ம்எதிர்வாதி 23.09.2022ம்தேதி இடையூறு செய்ய முயன்றதால் வாதி வழக்குச்சொத்தினை பொறுத்து போடிநாயக்கனூர் சார்பதிவக அலுவலகத்தில் 25.09.2022ம்தேதி வில்லங்கம் பார்த்தபோது 09.05.2006ம்தேதி வாதியின் தாயார் தொந்தியம்மாள் 1ம்எதிர்வாதி பெயருக்கு தாவாச்சொத்தினையும், அவரது பெயரிலான பொதுக்குடும்ப வீட்டினையும் தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளதாக கூறியுள்ளார். மேற்படி ஆவணம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து தொந்தியம்மாள் 1ம்எதிர்வாதிக்கு 27.09.2007ம்தேதி ஒரு சீர்திருத்தல் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்று கூறியுள்ளார். அந்த ஆவணம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து 1ம்எதிர்வாதி அவரது மனைவியான 2ம்எதிர்வாதிக்கு 14.02.2011ம்தேதி வழக்குச்சொத்தினை கிரையம் கொடுத்ததாக கூறியுள்ளார். அந்த ஆவணம் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி 2ம்எதிர்வாதி, 3ம்எதிர்வாதிக்கு கிரைய ஆவணமும், அதனைத்தொடர்ந்து மறுநாளே 2ம்எதிர்வாதி 3ம்எதிர்வாதிக்கு சீர்திருத்தல் பத்தரமும் எழுதிக்கொடுத்ததாக கூறியுள்ளார். அந்த ஆவணம் வா.சா.ஆ.4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவாச்சொத்து தொடர்ச்சியாக வாதியின் தந்தை காலம் தொட்டு வாதி மற்றும் 1ம்எதிர்வாதியின் கூட்டு அனுபவத்தில் இருந்துவருகிற நிலையில் 1ம்எதிர்வாதி வாதியின் பாகத்தினை மோசடி செய்யும் எண்ணத்துடன் தாவாச்சொத்தில் உரிமையில்லாத தொந்தியம்மாளிடம் ஒருதானசெட்டில்மெண்ட் ஆவணத்தை மோசடியாக உருவாக்கிக்கொண்டு அதனடிப்படையில் அவரது மனைவி பெயருக்கு கிரையமும் மனைவி மூலம் வேறு நபருக்கு கிரையம் கொடுத்தது போல் ஆவணத்தை உருவாக்கி வாதியின் பாகத்தினை மோசடி செய்ய முயன்று வருகின்றனர் என்றும் 1 முதல் 3 எதிர்வாதிகளால் ஏற்படுத்திக்கொண்டுள்ள ஆவணங்கள் தாவாச்சொத்தில் வாதியின் பாகத்தினைப்பொறுத்து செல்லாது என்பதுடன் அது இல்லா நிலையை அடைந்துவிட்டது என்றும், எனவே

M M J UMMUL FARITHA
Digitally signed by M M J UMMUL FARITHA
Date: 2023.11.21 17:50:26 +0530

வழக்குச்சொத்தில் வாதிக்குரிய சரிபாதி பாகத்தினை நயமிடர் பார்த்து பிரிவினை செய்யவும் வழக்குச்சொத்தினைப்பொறுத்து 1 முதல் 3 எதிர்வாதிகள் ஏற்படுத்திக் கொண்ட ஆவணங்கள் வாதியின் பாகத்தினை பொறுத்து செல்லாது என்று விளம்புகை செய்யவேண்டியும் வாதியால் இவ்வழக்குதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**10)** மேற்படி வாதி தரப்பில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளையும் ஆவணங்களையும் பரிசீலித்துப் பார்த்ததில் 1ம்பிரதிவாதிக்கு வாதி மற்றும் 1ம்பிரதிவாதியின் தாயார் தொந்தியம்மாள் தாவாச்சொத்தினையும் சேர்த்து தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது. ஆனால் வாதி தரப்பில் தாவாச்சொத்தானது வாதி மற்றும் 1ம்பிரதிவாதியின் தகப்பனார் மாயாண்டித்தேவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் மேற்படி மாயாண்டித்தேவர் இறந்த பின்னர் தாவாச்சொத்தினை வாதியும், 1ம்பிரதிவாதியும் தொந்தியம்மாளும் கூட்டாக அனுபவித்து வந்ததாக கூறியுள்ளார். மேலும் தொந்தியம்மாள் அவரது பெயரில் கிரையம் வாங்கப்பட்ட வீட்டில் வாதிக்குரிய பாகத்தினைப்பொறுத்து கடந்த 29.06.2009ம்தேதி பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்ததாக கூறியுள்ளார். ஆனால் அதற்கு முன்னரே தொந்தியம்மாள் 1ம்பிரதிவாதிக்கு 09.05.2006ம்தேதி அவரது பெயரில் கிரையம் வாங்கப்பட்ட சொத்தினை தானசெட்டில்மெண்ட் மூலம் எழுதிக்கொடுத்துள்ளதாக தெரியவருகிறது.

**11)** மேலும் தாவாச்சொத்து எவ்வாறு வாதி மற்றும் 1ம்பிரதிவாதியின் தாயார் தொந்தியம்மாளுக்கு கிடைத்தது என்பதைப்பற்றி வா.சா.ஆ.1ல் குறிப்பிடாமல் உள்ளதாலும் 1ம்பிரதிவாதியும் நீதிமன்றத்தில் ஆஜராகி தாவாச்சொத்து தொந்தியம்மாளுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டிருந்தது என்பதையும் நிரூபிக்காததாலும் 1முதல் 3 பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளதாலும் அவர்களுக்கெதிராக இந்நீதிமன்றம் எதிர்அனுமானம் கொள்கின்றது. எனவே வாதி தரப்பில் சாட்சியத்தின் அடிப்படையில் அவரது தகப்பனார் மாயாண்டித்தேவருக்கு தாவாச்சொத்து பாத்தியப்பட்டிருந்து பொது அனுபவத்தில் இருந்துவந்ததாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும் வா.சா.2 வாதியின் வழக்கிற்கு ஆதரவாக தாவாச்சொத்து கூட்டு அனுபவத்தில் பிரிக்கப்படாமல் பொதுவாக உள்ளது என்ற விபரத்தை

M M J UMMUL FARITHA
Digitally signed by M M J UMMUL FARITHA
Date: 2023.11.21 17:50:30 +0530

நேரடியாகத்தொியுமென்று சாட்சியமளித்துள்ளாா். எனவே தாவாச்சொத்து பொதுக்குடும்பச் சொத்தாக இருந்து வந்தநிலையில் வாதி மற்றும் 1ம்பிரதிவாதியின் தாயாரும் தகப்பனாரும் இறந்துவிட்ட நிலையில் அவா்களுக்கு வாதியும் 1ம்பிரதிவாதியும் வாாிசு என்ற அடிப்படையில் வாதி மற்றும் 1ம்பிரதிவாதியின் தகப்பனாரான மாயாண்டித்தேவருக்கு பாத்தியப்பட்ட தாவாச்சொத்தில் வாதி மற்றும் 1ம்பிரதிவாதிக்கு சாிபாதி பாகம் உள்ளதென்று இந்நீதிமன்றம் தீா்மானிக்கின்றது.

**12)** எனவே தாவாச்சொத்தினைப்பொறுத்து வாதியின் பாகத்தினையும் சோ்த்து 1ம்பிரதிவாதிக்கு தொந்தியம்மாள் எழுதிவைத்த தானசெட்டில் மெண்ட் பத்திரமும் சீா்திருத்தல் பத்திரமும் 1ம்பிரதிவாதி 2ம்பிரதிவாதிக்கு எழுதிவைத்த கிரைய பத்திரமும் 2ம்பிரதிவாதி, 3ம்பிரதிவாதிக்கு எழுதிவைத்த கிரைய பத்திரமும், சீா்திருத்தல் பத்திரமும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீா்மானிக்கின்றது.

**13)** வாதி வழக்குரைப்பாிகாரத்தில் ஏ பாிகாரமாக வழக்குரைச்சொத்துக்களை பிரதிவாதிகள் வழக்கு முடியும்வரையில் எந்தவித வில்லங்கத்திற்கும் உட்படுத்தக்கூடாதுஎன்று நிலையுறுத்துக்கட்டளைப்பாிகாரம் கோாியுள்ளாா். ஆனால் வாதி கோாியுள்ள மேற்படி பாிகாரத்தை இந்நீதிமன்றம் Mould செய்து வழக்குச் சொத்துக்களைப்பொறுத்து வாதியின் பாகத்தினை பாகப்பிாிவினை செய்து கொடுக்கும் வரையில் பிரதிவாதிகள் எவ்வித வில்லங்கத்திற்கும் உட்படுத்தக்கூடாது என்று கோாியுள்ள நிலையுறுத்துக் கட்டளைப்பாிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

**14) <u>இறுதியாக,</u>**

| | |
|---|---|
| 1. | அசல் வழக்கு எண்.169/2022 அனுமதிக்கப்படுகிறது.<br>வழக்குரைச்சொத்தில் வாதிக்குாிய சாிபாதி 1/2 பாகத்தினை எதிா்வாதிகள் நயமிடா் பாா்த்து பிாிவினை செய்து, தனித்த சுவாதீனம் தரும்படி கோாியுள்ள முதல்நிலை தீா்ப்பாணையும்,<br>வாதிக்குாிய சாிபாதி பாகத்தினை பிாிவினை செய்துகொள்ள இறுதிநிலை தீா்ப்பாணைக்கு அனுமதியளிக்க கோாியுள்ள பாிகாரமும்<br>1மஎதிா்வாதி பெயருக்கு தொந்தியம்மாள் என்பவரால் 09.05.2006மதேதி போடி சாா்பதிவக ஆவண எண்.3554/2006 |

M M J UMMUL FARITHA

Digitally signed by M M J UMMUL FARITHA
Date: 2023.11.21 17:50:34 +0530

| | |
|---|---|
| | தானசெட்டில்மெண்ட் ஆவணம் வாதியின் பாகத்தினைப்பொறுத்து செல்லாது என்றும்<br>1ம்எதிர்வாதி பெயருக்கு தொந்தியம்மாள் என்பவரால் 27.09.2007ம்தேதி எழுதிக்கொடுக்கப்பட்ட போடிநாயக்கனூர் சார்பதிவக ஆவண எண்.3259/2007 சீர்திருத்தல் ஆவணம் வாதியின் பாகத்தினைப்பொறுத்து செல்லாது என்றும்<br>1ம்எதிர்வாதியால் 2ம்எதிர்வாதி பெயருக்கு 14.02.2011ம்தேதி எழுதிக்கொடுக்கப்பட்ட போடிநாயக்கனூர் சார்பதிவக ஆவண எண்.1073/2011 கிரைய ஆவணம் வாதியின் பாகத்தினைப்பொறுத்து செல்லாது என்றும்,<br>2ம்எதிர்வாதியால் 3ம்எதிர்வாதி பெயருக்கு 21.09.2022ம்தேதி எழுதிக்கொடுக்கப்பட்ட போடிநாயக்கனூர் சார்பதிவக ஆவண எண்.5910/2022 கிரைய ஆவணம் வாதியின் பாகத்தினைப்பொறுத்து செல்லாது என்றும்,<br>2ம்எதிர்வாதியால் 3ம்எதிர்வாதி பெயருக்கு 22.09.2022ம்தேதி எழுதிக்கொடுக்கப்பட்ட போடிநாயக்கனூர் சார்பதிவக ஆவண எண்.5927/2022 சீர்திருத்தல் ஆவணம் வாதியின் பாகத்தினைப்பொறுத்து செல்லாது என்றும் கோரியுள்ள விளம்புகைப்பாகாரமும்,<br>வழக்குச்சொத்துக்களைப்பொறுத்து பாகப்பிரிவினை செய்து கொடுக்கும் வரையில் பிரதிவாதிகள் எவ்வித வில்லங்கத்திற்கும் உட்படுத்தக்கூடாது என்று கோரியுள்ள நிலையுறுத்துக் கட்டளைப்பாகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. |
| 2. | செலவுத்தொகை இல்லை. |

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு நவம்பர் மாதம் 21–ம் நாள் இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

M M J UMMUL FARITHA
Digitally signed by M M J UMMUL FARITHA
Date: 2023.11.21 17:50:39 +0530

***மாவட்ட உரிமையியல் நீதிபதி***
***போடிநாயக்கனூர்.***

**<u>வாதிகள் தரப்பு சாட்சி.</u>**

வா.சா.1. பிச்சைமணி

வா.சா.2. ஆறுமுகம்

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்.</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1. | 09.05.2006 | 1ம்எதிர்வாதிக்கு தொந்தியம்மாள் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம். | சான்று நகல் |
| 2 | வா.சா.ஆ.2. | 27.09.2007 | 1ம்எதிர்வாதிக்கு தொந்தியம்மாள் எழுதிக்கொடுத்த சீர்திருத்தல் பத்திரம். | சான்று நகல் |
| 3 | வா.,சா.ஆ.3. | 14.02.2011 | 1ம்எதிர்வாதி, 2ம்எதிர்வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம். | சான்று நகல் |
| 4 | வா.சா.ஆ.4. | 21.09.2022 | 2ம்எதிர்வாதி, 3ம்எதிர்வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம். | சான்று நகல் |
| 5 | வா.சா.ஆ.5. | 22.09.2002 | 2ம்எதிர்வாதி, 3ம்எதிர்வாதிக்கு எழுதிக்கொடுத்த சீர்திருத்தல் பத்திரம். | சான்று நகல் |
| 6 | வா.சா.ஆ.6. | 29.06.2009 | 1ம்எதிர்வாதிக்கு பிச்சைமணி எழுதிக்கொடுத்த பாகபாத்திய விடுதலை பத்திரம். | சான்று நகல் |
| 7 | வா.சா.ஆ.7. | 18.10.2023 | ஆறுமுகம் மற்றும் சுரேஷ் என்பவரின் பெயரில் உள்ள கூட்டுப்பட்டா. | |
| 8 | வா.சா.ஆ.8. | – | ஆறுமுகம் என்பவரின் ஆதார் அட்டை. | ஜெராக்ஸ் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u> இல்லை.**

M M J UMMUL FARITHA

Digitally signed by M M J UMMUL FARITHA
Date: 2023.11.21 17:50:45 +0530

***மாவட்ட உரிமையியல் நீதிபதி ,***
***போடிநாயக்கனூர் .***